நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை

எங்கெல்ஸ் 200:
பங்களிப்புகளும் வரம்புகளும்

மார்செல்லோ முஸ்ட்டோ

தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும்:
எஸ்.வி.ராஜதுரை

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

Engels 200:
Pangalippugalum Varambugalum

(Tamil Translation of

'Engels 200: Contributions and Limits of the "Second Fiddle"')

Author: **Marcello Musto**

Translation with Footnotes : **S.V.Rajadurai**

First Edition: December, 2020

Copyright: Author

No.of Pages: 24

Publisher:

New Century Book House Pvt. Ltd.,

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978-81-2344-031-6

Code No. A 4384

₹ 20/-

Branches

Ambattur (H.O.) 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027
Trichy 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371
Tirunelveli 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106
Dindigul 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667
Salem 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387
Ooty 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800
Pondicherry 0413-2280101 **Nagarcoil** 04652-234990

எங்கெல்ஸ் 200:

பங்களிப்புகளும் வரம்புகளும்

ஆசிரியர் : மார்செல்லோ முஸ்ட்டோ

தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும் : எஸ்.வி.ராஜதுரை

முதல் பதிப்பு: டிசம்பர், 2020

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.



பிரெடெரிக் எங்கெல்ஸ் : 28.11.1820 - 05.08.1895

எனக்கும் மார்க்ஸுக்குமிடையே இருந்த வேலைப் பிரிவினையின் காரணமாக, மார்க்ஸ் தன் மாபெரும் அடிப்படைப் பணியை விளக்கிக்கூறுவதற்கு ('மூலதனம்' நூலை எழுதுவதற்கு- எஸ்.வி.ஆர்.) அவருக்கு நேரம் கிடைத்தாக வேண்டும் என்பதனால், எங்கள் கருத்துகளை - குறிப்பாக, எங்களுக்கு எதிரான கருத்துகளுடன் நாங்கள் நடத்தும் போராட்டத்தில் - பருவ ஏடுகளில் முன்வைக்க வேண்டிய கடமை எனக்கு வந்து சேர்ந்தது. இதன் காரணமாக, பிற கருத்துகளுக்கு எதிராக எங்கள் கருத்துகளை, பெரும்பாலும் கருத்துப் போராட்ட வடிவத்தில் நான் விளக்கிக்கூற வேண்டியிருந்தது.

- பிரெடெரிக் எங்கெல்ஸ் (Preface to the second edition of The Housing Question, in *Marx Engels Collected Works,* Progress Publishers, Moscow, Vol 26,1990, p.427.

எங்கெல்ஸ் 200:
பங்களிப்புகளும் வரம்புகளும்[1]

- மார்செல்லோ முஸ்ட்டோ

I. மார்க்ஸுக்கு முன்பே

அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வின்[2] முக்கியத்துவத்தை கார்ல் மார்க்ஸுக்கு முன்பே புரிந்து கொண்டிருந்தவர் பிரெடெரிக் எங்கெல்ஸ். அவர்கள் இருவரும் முதல் முறையாகச் சந்திக்கும் தறுவாயில், எங்கெல்ஸ் அரசியல் பொருளாதாரம் பற்றி

---

1. எங்கெல்ஸின் 200ஆம் பிறந்த நாளையொட்டி 'Engels 200 Years: On Contributions and Limits of the "Second Violin"' என்ற தலைப்பிடப்பட்ட கட்டுரையை மார்செல்லோ முஸ்ட்டோ எனக்கும் வ.கீதாவுக்கும் அனுப்பி வைத்து, அதை நாங்களோ அல்லது வேறு எவரோ தமிழாக்கம் செய்து வெளியிட ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தார். அக்கட்டுரை 27.11.2020 அன்று இரவில்தான் எங்களுக்கு வந்து சேர்ந்தது. அக்கட்டுரையைத் தமிழாக்கம் செய்து எங்கெல்ஸ் பிறந்த நாளான 28.11.2020 அன்று வெளியிட எங்களுக்குக் கால அவகாசம் சிறிதும் இருக்க வில்லை. எனினும், என் துணைவியார் சகு தந்த ஊக்குவிப்பால் எங்கெல்ஸ் பிறந்த நாளன்று அந்த மொழியாக்கப் பணியை மேற்கொண்டு, அதை இரு நாட்களில் முடித்தது மட்டுமின்றி, தமிழ் வாசகர்களைக் கருத்தில் கொண்டு தேவைப்பட்ட இடங்களில் அடிக்குறிப்புகளையும் எழுதிச் சேர்த்தேன். என் மொழியாக்கத்தில் சில திருத்தங்களைச் செய்து அதைச் செழுமைப்படுத்தினர் வ.கீதாவும் மருத்துவர் ஜெகதாவும். அதன் பிறகு தற்செயலாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'ஜேகோபின்' என்ற மார்க்ஸிய ஏட்டைப் பார்க்க நேர்கையில் அதில் எங்கெல்ஸின் 200ஆம் பிறந்த நாளைச் சிறப்பிக்கும் சில கட்டுரைகள் இருப்பது தெரிய வந்தது. அதில் மார்செல்லோ முஸ்ட்டோவின் கட்டுரையும் ஒன்று. எங்களுக்கு அனுப்பிய கட்டுரையில் ஓரிரு சிறு மாற்றங்களை மட்டுமே உள்ளடக்கிய கட்டுரையாக அது இருந்ததுடன் அதற்கு அந்த ஏட்டின் ஆசிரியர் குழு கொடுத்திருந்த தலைப்பும் வித்தியாசமானதாக இருந்தது (Friedrich Engels Was More Than Second Fiddle to Karl Marx, Jacobin,11.28.2020, *https://www.jacobinmag.com/2020/11/friedrich-engels-karl-marx-relationship* (Accessed on 30.11.2020). எனவே இந்தத் தமிழாக்கத்திற்கு 'எங்கெல்ஸ் 200 : பங்களிப்புகளும் வரம்புகளும்' என்று தலைப்பே சரியானது என்று நானும் வ.கீதாவும் முடிவு செய்தோம். - எஸ்.வி.ராஜதுரை.

2. அரசியல் பொருளாதாரம் (political economy) என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டில், முதலாளியப் பொருளாதாரக் கோட்பாடுகளைக் குறித்தது. ஒரு நாட்டின் செல்வத்துக்கான ஆதாரங்கள், உற்பத்தி முறை, விநியோக முறை ஆகியனவற்றை விளக்கும் கோட்பாடுகளே அவை.

மார்க்ஸைவிட அதிகமான கட்டுரைகளை வெளியிட்டிருந்தார். ஆனால் அவருடைய நண்பர்தான் இத்துறையில் உலகப் புகழ்பெற்றவராக வருவார் என்று அன்று யாருக்குத் தெரிந்திருக்கும்? 200 ஆண்டுகளுக்கு முன், 1820 டிசம்பர் 28இல் ஜெர்மனியின் பார்மென் நகரில் (அது இப்போது வுப்பெர்டால் நகரின் புறநகராக உள்ளது) பிறந்த அவர் எதிர்காலத்தில் சிறப்பாக வரக்கூடிய இளைஞராக இருந்தார். ஜவுளித் தொழிலதிபராக இருந்த அவரது தந்தை தன் மகனுக்குப் பல்கலைக்கழகப் படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பை மறுத்து, தன் சொந்தத் தொழில் நிறுவனத்தில் அவரை ஈடுபடுத்தினார். ஆகவே, பல்வேறு துறைகளில் அறிவைப் பெறுவதில் தணியாத வேட்கை கொண்டிருந்த அவர் சுயகல்வியில் ஈடுபட்டார். பழமைவாத, வலுவான மத நம்பிக்கை கொண்டிருந்த தன் குடும்பத்தினருடன் மோதலைத் தவிர்ப்பதற்காக புனைப்பெயரில் கட்டுரைகளை எழுதிவந்தார். நாத்திகராக ஆன எங்கெல்ஸ், அவரது 22ஆம் வயதில், மான்செஸ்டர் நகரில் அவரது தந்தைக்குச் சொந்தமான 'எர்மென் அண்ட் எங்கெல்ஸ்' நூற்பாலையில் வேலை செய்வதற்காக அனுப்பப்பட்டார். இங்கிலாந்தில் அவர் கழித்த இரண்டாண்டுகள் அவரது அரசியல் நம்பிக்கைகள் முதிர்ச்சியடைவதில் தீர்மானகரமானவையாக இருந்தன. அப்போதுதான் அவர், பாட்டாளி வர்க்கத்தின் மீதான முதலாளியத்தின் சுரண்டல், தனிச்சொத்து, தனிநபர்களுக்கிடையிலான போட்டி ஆகியவற்றின் விளைவுகளை நேரடியாக அவதானித்தார். சாசனவாத இயக்கத்துடன்[3] தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட அவர்,

3. சாசனவாத இயக்கம் (Chartist Movement) : பிரிட்டனில் 1830களிலும் 1840களிலும் இருந்த பாட்டாளிவர்க்கத்தின் முதல் வெகுமக்கள் இயக்கம். நாடு முழுவதிலும் பல இலட்சக்கணக்கான தொழிலாளிகளும் குட்டி-பூர்ஷ்வாக்களும் பங்கேற்ற பொதுக் கூட்டங்கள், பேரணிகள் ஆகியவற்றை நடத்திய அந்த இயக்கம் இலட்சக்கணக்கானோரின் (12,80,000 முதல் 30,00,000 வரை) கையெழுத்துகளைக் கொண்ட சாசனங்களை (கோரிக்கை மனுக்கள்) பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. அந்தக் கோரிக்கைகளாவன: 1.வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் வாக்குரிமை; 2.இரகசிய வாக்கெடுப்பு முறை; 3.நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொத்துத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருப்பது நீக்கப்பட வேண்டும்; 4. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்; 5. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரே எண்ணிக்கையிலான வாக்காளர்கள் இருக்க வேண்டும்; 6. ஒவ்வோர் ஆண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்தக் கோரிக்கை சாசனங்கள் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை; பிரிட்டிஷ் அரசு, கடுமையான ஒடுக்குமுறைகள், பிரித்தாளும் சூழ்ச்சி ஆகியவற்றின் மூலம் அந்த இயக்கத்தை நசுக்கியது. எஞ்சியிருந்த சாசனவாதிகள் இருவகையான சீர்திருத்தவாதப் போக்குகளை மேற்கொண்டனர். தொழிலாளரின் போராட்டக் குணத்தை மழுங்கடிப்பதற்காக பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1842இல் சுரங்கத் தொழில் சட்டத்தை இயற்றியது; 1847இல் தொழிற்சாலை வேலை நேரம் பத்து மணியாகக் குறைக்கப்பட்டது.

ஐரிஷ் தொழிலாளிவர்க்கப் பெண்மணி மேரி பர்ன்ஸுடன் காதல் வயப்பட்டார். எங்கெல்ஸின் அறிவு வளர்ச்சியில் முக்கியப் பாத்திரம் வகித்தவர் மேரி பர்ன்ஸ். திறமைமிக்க இதழியலாளராக இருந்த எங்கெல்ஸ், இங்கிலாந்தில் நடந்து வந்த போராட்டங்களைப் பற்றிய விவரங்களை ஜெர்மனியில் வெளியிட்டதுடன், ஜெர்மனியில் நிகழத் தொடங்கியிருந்த சமூக முன்னேற்றங்களைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிவந்தார். 'பிரெஞ்சு- ஜெர்மன் வருடாந்திர ஏடு'[4] என்னும் ஏட்டில் வெளியிடப்பட்ட அவரது 'அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வுக்கான உருவரைகள்'[5] என்ற கட்டுரை மார்க்ஸின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. அந்த சமயத்தில் அவரும் அதே விஷயத்தில் தனது சக்தி முழுவதையும் செலுத்தத் தீர்மானித்திருந்தார். அவர்களின் வாழ்க்கையில் இறுதிவரை வரை நீடித்த கோட்பாட்டு, அரசியல் ஒத்துழைப்பை அவர்கள் இருவரும் தொடங்கியது அப்போதுதான்.

அதற்கு அடுத்த ஆண்டில் எங்கெல்ஸ் 'இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'[6] என்ற அவரது முதல் நூலை வெளியிட்டார். அந்த நூலின் துணைத் தலைப்பு, "நேரடியான

4. Deutsch-Französische Jahrbücher. ஜெர்மனியில் மார்க்ஸின் இளமைக்காலத் தோழராக இருந்த அர்னால்ட் ரூகெவின் (Arnold Ruge) அழைப்பின் பேரில் தன் துணைவியாருடன் பாரிஸுக்குச் சென்ற மார்க்ஸ், ரூகெவுடன் இணைந்து 1844இல் மேற்சொன்ன ஏட்டைத் தொடங்கினார். அது ஒரே ஒரு இரட்டை இதழுடன் நின்றுவிட்டது. மார்க்ஸ் எழுதிய "யூதப் பிரச்சினை குறித்து" (On Jewish Question), "உரிமை பற்றிய ஹெகலின் தத்துவம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வு" (Introduction to the Critique of Hegel's Philosophy of Right) என்ற கையெழுத்துப்படிகளுக்கான முன்னுரை ஆகியனவும் எங்கெல்ஸின் "அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வுக்கான உருவரைகள்" (Outlines of a Critique of Political Economy) என்ற ஆக்கமும் இந்த இரட்டை இதழில் வெளியிடப்பட்டன. 'Critique' என்ற சொல் அல்லது கருத்தாக்கம் (concept) 'விமர்சனப் பகுப்பாய்வு' என்ற பொருளில் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டது.

5. "Outlines of a Critique of Political Economy". இது மார்க்ஸ் பாரிஸில் எழுதிய தத்துவ, பொருளாதாரக் கட்டுரைகள் (மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்தில் வெளியிடப் படாதவை) அடங்கிய, மாஸ்கோவில் வெளியிடப்பட்ட "Economic and Philosophical Manuscripts 1844" என்ற தலைப்பில் வெளியான நூலில் சேர்க்கப்பட்டிருந்தது. மார்க்ஸின் மேற்சொன்ன கட்டுரைகள் 'Paris Manuscripts 1844' என்றும் அழைக்கப்படுகின்றன. 'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கம் முக்கியத்துவம் பெற்றிருந்த அக்கட்டுரைகள் முழுமை பெறாதவை. இக்கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ள தொகுப்பு: *Marx Engels Collected Works* Vol 3, Progress Publishers, Moscow, 1975 (இனி இத் தொகுப்புகள் *MECW* என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படும்).

6. Frederick Engels, The Condition of the Working-Class in England. From Personal Observation and Authentic Sources, *MECW*, Vol.4, 1975.

அவதானிப்பு, உண்மையான தரவுகள்" ஆகியவற்றின் அடிப்படையில் அந்த நூல் எழுதப்பட்டிருந்ததை வலியுறுத்தின. "சோசலிசக் கோட்பாடுகளுக்கு வேண்டிய உறுதியான அடித்தளத்தை வழங்குவதற்கு பாட்டாளிவர்க்கத்தின் வேலை நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றைப் பற்றிய உண்மையான அறிவு "முழுமுற்றாக அவசியம்" என்று அந்த நூலின் முகப்புரையில் எழுதினார். அவரின் இந்த நூலைப் பின்பற்றி வேறு ஆய்வுரைகள் பின்னர் வெளிவந்தன. "மகா பிரிட்டனின் தொழிலாளிவர்க்கத்துக்கு 'சமர்ப்பணம்'" செய்யப்பட்ட அந்த நூலில், அவர் இந்தத் துறையில் தனக்கிருந்த அனுபவத்தின் காரணமாக தொழிலாளர்களின் யதார்த்தமான வாழ்க்கை பற்றிய அறிவைத் தன்னால் பெற முடிந்தது என்று குறிப்பிட்டார். அந்தத் தொழிலாளிகள் "தன்னைப் பாரபட்சமாக நடத்தவில்லை; தன்னை அந்நியராகக் கருதவில்லை" என்றும், அவர்கள் "தேசியக் குறுங்கண்ணோட்டம், தேசிய அகம்பாவம் ஆகிய கொடும் சாபக் கேட்டிலிருந்து விடுபட்டிருந்தது தனக்கு மகிழ்ச்சியளித்தது" என்றும் குறிப்பிட்டார்.

II. புரட்சியும் எதிர்-புரட்சியும்

கம்யூனிஸ நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதற்காக 1845இல் பிரெஞ்சு அரசாங்கம் தன் நாட்டிலிருந்து மார்க்ஸை வெளியேற்றிய போது, எங்கெல்ஸ் ப்ரெஸ்ஸெல்ஸ் நகரில் அவருடன் சேர்ந்து கொண்டார். அவர்கள் இருவரும் இணைந்து 'புனிதக் குடும்பம், அல்லது விமர்சனப் பகுப்பாய்வு விமர்சனம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வு : ப்ரூனோ பவருக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் எதிராக'[7] என்ற நூலை வெளியிட்டனர் (இதுதான் அவர்கள் இருவரும் இணைந்து எழுதிய முதல் நூல்). பின்னர் அவர்கள் கையெழுத்துப் படியாகவே எஞ்சி விட்டதும், "எலிகளின் கடித்துக் குதறும் விமர்சனத்துக்குவிடப்பட்டதுமான" 'ஜெர்மன் கருத்துநிலை' என்ற மிகப் பெரிய நூல் ஒன்றை எழுதினர்.[8] அந்தக் காலகட்டத்தில்

7. The Holy Family, or Critique of Critical Criticism Against Bruno Bauer and Company, *MECW*, Vol.4, 1975.

8. 'அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வுக்கு ஒரு பங்களிப்பு' (1859) என்னும் நூலுக்கு மார்க்ஸ் எழுதிய முகப்புரையில், வெஸ்ட்ஃபேலியாவிலிருந்த (இது ஜெர்மனியின் வடமேற்குப் பகுதியிலுள்ள பிரதேசம்-எஸ்.வி.ஆர்.) பதிப்பாளர்களுக்கு 'ஜெர்மன் கருத்துநிலை'யின் கையெழுத்துப்படிகளை ஒரு நூலாக வெளியிடுவதற்கு அனுப்பியதாகவும், ஆனால் சூழ்நிலைமைகள் மாறிவிட்டதால் அதை அச்சிட இயலவில்லை என்று அவர்கள் தனக்கும் எங்கெல்ஸுக்கும் அறிவித்துவிட்டதாகவும் கூறுகிறார். மேலும், "தங்கள் முதன்மை நோக்கம் - சுய தெளிவு - நிறைவேறிவிட்டதால், அந்தக் கையெழுத்துப் படிகளை மிகுந்த விருப்பத்தோடு எலிகளின் கடித்துக் குதறும் விமர்சனத்துக்குத் தாங்கள் விட்டு→

தன் நண்பருடன் இங்கிலாந்துக்குச் சென்ற எங்கெல்ஸால், தான் ஏற்கெனவே கண்டு புரிந்துவைத்திருந்த முதலாளிய உற்பத்தி முறையை அவருக்குக் காட்ட முடிந்தது. ஹெகலுக்குப் பிந்திய தத்துவம் பற்றிய தனது விமர்சனப் பகுப்பாய்வை மார்க்ஸ் முற்றிலுமாகக் கைவிட்டு தனது நண்பருடன் அச்சமயம் மேற்கொண்ட நீண்ட பயணம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பதிப்பிக்கப்பட்ட 'மூலதனம்' நூலில் போய் முடிந்தது. பின்னர் அவர்கள் இருவரும் 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யை *(1848)* எழுதியதுடன் ஐரோப்பாவை அசைத்து வந்த கொந்தளிப்புகளில் பங்கேற்றனர்.

அந்த ஐரோப்பியப் புரட்சியின்[9] தோல்விக்குப் பிறகு, மார்க்ஸ் இங்கிலாந்துக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்.[10] அவரை அடியொற்றி எங்கெல்ஸும் இங்கிலாந்துக் கால்வாயைக்[11] கடந்து

←விட்டதாக"வும் கூறுகிறார். (Karl Marx, Preface to 'A Contribution to the Critique of Political Economy', Marxist Internet Archive, https://www.marxists.org/archive/marx/works/1859/critique-pol-economy/preface.htm (Accessed on 27.11.2020). 'ஜெர்மன் கருத்துநிலை'யின் ஆங்கில மொழியாக்கம் முதன் முதலில் மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தால் *1969* ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது (MECW, Vol 5, Progress Publishers, Moscow,1987, Note 8 in p.569.)

9. ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ முடியாட்சிகளுக்கு எதிராக நடந்த முதலாளிய ஜனநாயகப் புரட்சிகள்; இப்போது இத்தாலியின் பகுதியாக உள்ள சிசிலியில் தொடங்கி பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கியப்படாமல் இருந்த அன்றைய இத்தாலி, ஆஸ்திரியப் பேரரசு ஆகியவற்றுக்குப் பரவிய புரட்சிகள். அவை அனைத்தும் தோல்வியிலும் ஒடுக்குமுறைக்கு ஆளாவதிலும் போய் முடிந்தன. சிதறுண்டு, பல்வேறு முடிமன்னர்கள், இளவரசர்கள் ஆகியோரின் ஆட்சியின் கீழ் இருந்த நிலப்பிரபுத்துவ ஜெர்மானியப் பகுதிகளை ஒன்றிணைத்து ஒரு ஜனநாயக அரசை உருவாக்குவதற்காக நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியில் மார்க்ஸும் எங்கெல்ஸும் நேரடியாகப் பங்கேற்றனர் - களப் போராளியாக எங்கெல்ஸும், அந்தப் புரட்சியை ஆதரித்துப் பரப்புரை செய்துவந்த, கொலோன் நகரிலிருந்து நடத்தப்பட்ட 'புதிய ரைன் நாளேட்'டின் *(Neue Rhinish Zeitung)* ஆசிரியராக மார்க்ஸும். ஜெர்மன் பூர்ஷ்வா வர்க்கத்தின் கோழைத்தனத்தால் அந்தப் புரட்சி தோல்வியடைந்தது.

10. ஜெர்மனியில் நடந்த புரட்சியில் பங்கேற்றதற்காக அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட மார்க்ஸ் மீண்டும் ப்ரெஸ்ஸெல்ஸுக்குத் திரும்பி வந்தார். மிக விரைவில் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டார். முன்பு பாரிஸில் இருந்த போது அவருடன் நட்புக் கொண்டிருந்த ஒரு சோசலிஸ்ட்டின் அழைப்பின் பேரில் மீண்டும் பாரிஸுக்குச் சென்றார். ஆனால் அவர் அங்கு போய்ச் சேர்ந்ததுமே, ஆயுதமேந்திய பிரெஞ்சுப் போலிசார், அவர் பிரான்ஸின் கிராமப்புறப் பகுதியான பிரிட்டானிக்குச் சென்றுவிட வேண்டும், அல்லது இங்கிலாந்துக்குப் போக வேண்டும் என்று கூறும் அரசாங்க ஆணையைக் காண்பித்தனர். அப்போது மீண்டும் கருவுற்றிருந்த தன் துணைவியாரின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு இங்கிலாந்துக்குச் செல்ல முடிவு செய்தார் மார்க்ஸ்.

11. ஆங்கிலக் கால்வாய்: தென் இங்கிலாந்தையும் வட பிரான்ஸையும் பிரிக்கும் அட்லாண்டிக் கடல் பகுதிதான் 'ஆங்கிலேயக் கால்வாய்' (The English Channel); இது சுருக்கமாக, 'கால்வாய்' என அழைக்கப்படுகிறது.

வந்து சேர்ந்தார். மார்க்ஸ் இலண்டனில் குடியிருக்கத் தொடங்க, அவரது நண்பரோ இலண்டனிலிருந்து ஏறத்தாழ 300 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மான்செஸ்டர் நகரில் அவரது குடும்பத் தொழிலை நிர்வகிக்கச் சென்றார். அவரே கூறியது போல, அவர் மார்க்ஸின் "பக்க வாத்தியமாக" ஆகி,[12] தன்னையும் (பெரும்பாலும் எந்த வருமானமும்

12. மார்க்ஸின் 'பக்க வாத்தியம்' (Marx's "Second fiddle"): மேற்கத்திய இசை நிகழ்ச்சிகளில், இசைக்கருவிக் குழுவைச் (orchestra) சேர்ந்தவர்கள் அவரவர்கள் வாசிக்கும் கருவிகளைப் பொருத்து தனித்தனி இடங்களில் அமரவோ நிற்கவோ வைக்கப்பட்டிருப்பர். இவர்களில் நரம்புக் கருவிகள் (string instruments) வாசிப்பவர்களுக்கும் கூட அவரவர் வாசிக்கும் கருவிகளுக்கு (வயலின் [ஃபிடில்], வயோலா, செல்லொ, டபிள் பேஸ் முதலின) ஏற்ப தனித்தனி இடங்கள் இருக்கும். வயலின் வாசிப்பவர்களும் கூட முதல் வயலின் வாசிப்பவர், இரண்டாம் வயலின் வாசிப்பவர் என்று பாகுபடுத்தப்பட்டுத் தனித்தனி இடங்களில் இருப்பர். முதல் வயலின் வாசிப்பவர் இன்னிசை (melody) இசைப்பார். அவருக்குத் துணை புரியும் வண்ணம் இரண்டாம் வயலின் வாசிப்பவர் தங்கள் கருவிகளை வாசிப்பர். இருப்பினும் முதல் வயலின் வாசிப்பவர், இரண்டாம் வயலின் வாசிப்பவர் ஆகிய இருவருக்குமே ஒரே அளவிலான இசைஞானமும் கடின உழைப்பும் இருக்கும். முதல் வயலின் வாசிப்பவர், இரண்டாம் வயலின் வாசிப்பவரின் கடின உழைப்பை அங்கீகரித்து அவர்களைப் பாராட்டுவர். ஆனால், பொதுவாக முதல் வயலின் வாசிப்பவருக்குள்ள முக்கியத்துவம் இரண்டாம் வயலின் வாசிப்பவருக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்த உண்மையிலிருந்துதான் 'இரண்டாம் வயலின் (ஃபிடில்)' என்பது 'ஒருவருக்குக் கீழே பணிபுரிபவர், அல்லது அவருடன் ஒப்பிடுகையில் 'இரண்டாம்பட்சப் பாத்திரம் வகிப்பவர்' என்று பொருள் படும் மரபுத்தொடர் உருவாகியது. மார்க்ஸும் எங்கெல்ஸும் மேற்கத்திய இசையில் மிகுந்த இரசனையும் நல்ல அறிவும் கொண்டிருந்தவர்களாக இருந்ததால், எங்கெல்ஸ் தனக்கும் மார்க்ஸுக்கும் இருந்த அறிவுசார்ந்த உறவைக் குறிக்க 'இரண்டாவது வயலின்' என்ற மரபுத்தொடரைப் பயன்படுத்தியிருக்கக்கூடும். அவர்களது படைப்புகளில் பல்வேறு இசைவாணர்களுடன் அவர்களது இசைப்படைப்புகளும் குறிப்பிடப் படுகின்றன. அவர்களின் இசைஞானம், இளம் வயதில் அவர்கள் இசையமைப்பில் (composing) மேற்கொண்ட முயற்சிகள் ஆகியன பின்வரும் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன: Mark Lindley, Marx and Engels on Music, MR online, August 18, 2010, *https://mronline.org/2010/08/18/marx-and-engels-on-music/* (Accessed on August 10, 2010). இந்திய,தமிழ் செவ்வியல் இசையில் 'முதல் வயலின்', 'இரண்டாவது வயலின்' என்ற பாகுபாடு இல்லை. எனவே எங்கெல்ஸ் பயன்படுத்தும் "second violin" என்பதற்கு நிகராகவும், நம் நாட்டுச் சூழலுக்குப் பொருந்தும் வகையிலும் 'பக்கவாத்தியம்' என்ற சொல் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, எங்கெல்ஸ் தன்னை மார்க்ஸின் 'பக்க வாத்தியம்' என்று கூறிக்கொண்டது அவரது ஈடிணையற்ற தன்னடக்கமாகவே கருதப்பட வேண்டும். மார்க்ஸ் இறந்த பிறகு, தனக்கும் மார்க்ஸுக்கும் நெருக்கமான நண்பராகவும் தோழராகவும் இருந்த யொஹான் ஃபிலிப் பெக்கருக்கு 1884ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று எழுதிய கடிதத்தில்தான் எங்கெல்ஸ் தன்னை மார்க்ஸின் "second fiddle" என்று கூறியுள்ளார். மார்க்ஸின் மறைவுக்குப் பிறகு தான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்த பெரும் பொறுப்புகளைப் பற்றி அந்தக் கடிதத்தில் எழுதுகிறார்: "நான் எதற்குப் பொருத்தமானவனோ அதற்கு - அதாவது, "பக்க வாத்தியம்" மட்டுமே வாசிப்பதற்கு (playing second fiddle) வாழ்நாள் முழுவதையும் செலவிட்டுள்ளேன். உண்மையில் நான் அந்த வேலையை நியாயமான அளவுக்கு நன்றாகச் செய்துள்ளேன் என்று நம்புகிறேன். மார்க்ஸைப் →

இல்லாதிருந்த) தன் நண்பரையும் பராமரிக்கும் பொருட்டு 1870வரை அவருடைய தந்தையின் ஆலையை நிர்வகிக்க ஒப்புக்கொண்டார். அந்த வேலையிலிருந்து ஓய்வு பெற்று கடைசியில் இங்கிலாந்தின் தலைநகரில் இருந்த தன் நண்பருடன் மீண்டும் இணையும் வரையிலான அந்த இரு தசாப்தங்களில், அவர்கள் இருவரும் தங்கள் வாழ்க்கையின் மிக மும்முரமான பகுதியைக் கழித்து, அந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த அரசியல், பொருளாதார நிகழ்வுகளைப் பற்றிய தங்கள் குறிப்புகளை ஒவ்வொரு வாரமும் பலமுறை ஒப்பிட்டுப் பார்த்து வந்தனர்.

அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதிய 2,500 கடிதங்களில் பெரும் பாலானவை இந்த இருபதாண்டுக் காலத்தைச் சேர்ந்தவை. இந்தக் காலகட்டத்தில் ஏறத்தாழ இருபது நாடுகளைச் சேர்ந்த செயலார்வலர்கள், அறிவாளிகள் ஆகியோருக்கு ஏறத்தாழ 1,500 கடிதங்களை அனுப்பினர். பிரமிக்கத்தக்க எண்ணிக்கையிலான இந்தக் கடிதங்களுடன் எங்கெல்ஸுக்கும் மார்க்ஸுக்கும் மூன்றாவது மனிதர்கள் எழுதிய 10,000 கடிதங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த 10,000 கடிதங்கள் தவிர, கண்டறியப்பட முடியாமல் போன, ஆனால் எழுதப்பட்டவை என்று நிச்சயமாக அறியப் பட்ட 6,000 கடிதங்களையும் சேர்க்க வேண்டும். இவை விலைமதிக்க முடியாத பொக்கிசமாகும். இவற்றில் சில, அவர்கள் இருவரும் தங்கள் எழுத்துகளில் முழுமையாக வளர்த்தெடுக்கப்படாத கருத்துகளைக் கொண்டுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பலராலும் எழுதப்பட்ட கடிதங் களுடன் இந்த இரு கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் பேனாக்களிலிருந்து நீரோட்டம் போல் வெளிவந்த கடிதங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் கற்றறிவுகொண்ட குறிப்புகளைக் கொண்டவை மிகச் சிலவே. இந்தக் கடிதங்கள் வியப்பு தருவதற்கான இன்னொரு காரணம், அவை பல்வேறு மொழிகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இடைவிடாமல்

←போல அவ்வளவு அற்புதமான முதல் ஃபிடிலைக் கொண்டிருந்ததில் நான் மகிழ்ச்சி கொண்டிருந்தேன். ஆனால் இப்போது, கோட்பாட்டு விஷயங்களில் நான் மார்க்ஸின் இடத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று திடீரென எதிர் பார்க்கப்படும்போது, தவிர்க்கமுடியாமல் முட்டாள்தனமான தவறுகள் ஏற்படும். அதை மற்றவர்களைக் காட்டிலும் நான்தான் நன்றாக உணர்ந்துள்ளேன்" (*MECW*, Vol.47, pp 201-203.) உண்மையில், அறிவாற்றலிலும் மார்க்ஸியத்தைத் தோற்றுவிப்பதிலும் எங்கெல்ஸ் தனக்கு இணையானவராகவே இருந்தார் என்று மார்க்ஸ் கருதியதற்கான சான்றுகளிலொன்றாக, 1864இல் அவர் உடல்நலம் குன்றியிருந்தபோது எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைக் கூறலாம். மார்க்ஸ், அக்கடிதத்தில் எங்கெல்ஸிடம் கூறுகிறார்: "நீங்கள் அறிந்துள்ளதுபோல, 1. எல்லா விஷயங்களிலும் நான் தாமதமாகப் பிரவேசிப்பது வழக்கமாகிவிட்டது. 2. கிட்டத்தட்ட எப்போதுமே நான் உங்களை அடியொற்றிச் செல்கிறேன்" (Marx to Engels, 4th July 1864, *MECW* 41, p 546)

மாறி மாறி எழுதப்பட்டவையாக இருப்பதும் பண்டைய இலத்தின், கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டுள்ள நூல்களிலிருந்து காட்டப்படுபவை உட்பட ஏராளமான, அறிவார்ந்த மேற்கோள்களை உள்ளடக்கியிருப்பதும் ஆகும். மார்க்ஸுக்கு ஒன்பது மொழிகளில் வெளிவந்தவற்றைப் படிக்கத் தெரியும். எங்கெல்ஸ் 12 மொழிகளில் புலமை பெற்றிருந்தார். இந்த இரண்டு மனிதநேயர்களும் இலக்கியப் படைப்புகளை மிகவும் நேசித்தவர்களாவர். ஷேக்ஸ்பியரின் படைப்புகளின் பகுதிகள் மார்க்ஸுக்கு மனப்பாடம். தான் வைத்திருந்த ஈஸ்கலஸ், தாந்தே, பல்ஸாக் ஆகியோரின் நூல்களைப் புரட்டிப் பார்ப்பதில் அவர் ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. எங்கெல்ஸோ, மான்செஸ்டரில் இருந்த ஷில்லர் நிறுவனத்தின்[13] தலைவராக நீண்டகாலம் இருந்ததுடன், அரிஸ்டாட்டில், கெதெ, லெஸ்ஸிங் ஆகியோரை வழிபடுபவராகவும் இருந்தார். அவர்களுடைய கடிதப் போக்குவரத்து, சர்வதேச நிகழ்வுகளையும் புரட்சிக்கான சாத்தியப்பாடுகளையும் பற்றிய இடைவிடாத விவாதங்களுடன் தொழில்நுட்பம், நிலவியல், வேதியியல், இயற்பியல், கணிதவியல், மானுடவியல் ஆகியவற்றில் அவர்கள் காலத்தில் ஏற்பட்டு வந்த முன்னேற்றங்களைப் பற்றிய அக்கறைகளையும் கொண்டிருந்தது. மார்க்ஸ் எப்போதுமே எங்கெல்ஸை தன்னுடன் விவாதித்து கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு இன்றியமையாதவராகவே கருதி வந்தார். விவாதத்துக்குரிய விஷயங்களில் ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டிய போதெல்லாம் மார்க்ஸ், விமர்சனப் பகுப்பாய்வு கொண்ட தனது நண்பரிடம் கலந்தாலோசிப்பார்.

---

13. ஷில்லர் (Friedrich Schiller: 1759 - 1805) : ஜெர்மானியக் கவிஞரும், தத்துவ அறிஞரும், மருத்துவரும், நாடக ஆசிரியருமான ஷில்லெரின் நூறாவது பிறந்த நாளை யொட்டி, ஜெர்மனியிலிருந்து மான்செஸ்டெர் நகருக்குப் புலம்பெயர்ந்து வந்த ஜெர்மானியர்களால் 'ஷில்லர் நிறுவனம்' (Manchester Schiller Institute) தோற்று விக்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் செயல்பாடுகளைப் பற்றிய விமர்சனம் எங்கெல்ஸிடம் இருந்ததால் அவர் அதில் உடனடியாகச் சேரவில்லை. அதன் விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு அதில் உறுப்பினராகச் சேர்ந்த எங்கெல்ஸ், அந்த நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைமைப் பொறுப்பு வகித்த காலத்தில் அந்த நிறுவனம் முற்போக்கான செயல் பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், பாட்டாளிவர்க்கப் புரட்சியாளர்களை இகழ்ந்துரைத்து வந்த கார்ல் வோக்ட் (Karl Vogt) என்ற ஜெர்மானிய அரைவேக் காட்டுப் பேர்வழி அந்த நிறுவனத்தில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்ட போது, எங்கெல்ஸ் தலைவர் பதவியிலிருந்து விலகினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் அந்த நிறுவனத்தில் பணியாற்றும் உற்சாகம் அவருக்கு இருக்கவில்லை (*MECW*, Vol. 20, pp 417-420, Note 305 in p.506.)

சிந்தனைத் தளத்தில் அவர்களுக்கிடையில் இருந்ததைக் காட்டிலும், மனிதர்கள் என்ற முறையில் அவர்களுக்கிடையில் இருந்த உறவு மேலும் அசாதாரணமானது. தான் எதிர்கொண்டிருந்த மிக மோசமான பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து பல பத்தாண்டுகளாகத் தன்னை வாட்டி வந்த பல்வேறு உடல்நலப் பிரச்சினைகள் வரை எல்லா வற்றையும் மார்க்ஸ் எங்கெல்ஸிடம் கூறுவார். மார்க்ஸுக்கும் அவரது குடும்பத்திற்கும் உதவுவதற்காக எங்கெல்ஸ் தனக்கான சௌகரியங் களையும் தேவைகளையும் பொருட்படுத்தாது மார்க்ஸின் குடும்பத்தார் கண்ணியமான வாழ்க்கையை வாழ்வதற்கும், மார்க்ஸ் 'மூலதனம்' நூலை எழுதி முடிப்பதைச் சாத்தியமாக்குவதற்கும் தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் எப்போதும் செய்துவந்தார். தன் நண்பர் செய்துவந்த நிதி உதவிக்காக அவருக்கு மார்க்ஸ் எப்போதும் நன்றியுடையவராக இருந்தார். 'மூலதனம்' நூலின் முதல் பாகத்தின் மெய்ப்புகளைச் சரி பார்ப்பதை முடித்த ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு 1867ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஓர் இரவில் மார்க்ஸ், "இது சாத்தியப்பட்டதற்கு உங்கள் ஒருவருக்கு மட்டுமே கடன்பட்டிருக்கிறேன்"[14] என்று தன் நண்பருக்கு எழுதியதில் இந்த நன்றியுணர்வைக் காணலாம்.

அந்த இருபது ஆண்டுகளிலும்கூட எங்கெல்ஸ் எழுதுவதை ஒருபோதும் நிறுத்தவில்லை. 1524-25ஆம் ஆண்டுகளில் ஜெர்மனியில் நடந்த கிளர்ச்சிகளைப் பற்றிய, 'ஜெர்மனியில் உழவர் போர்'[15] என்ற நூலை 1850இல் வெளியிட்டார். அந்த நூல், 1848-49 ஆம் ஆண்டுகளில் நடந்த புரட்சியின் போது குட்டி பூர்ஷ்வா வர்க்கம் எப்படி நடந்து கொண்டதோ, அதைப் போன்றே உழவர்கள் நடத்திய கிளர்ச்சிகளில் மத்தியதர வர்க்கம் நடந்துகொண்டதையும் அந்தக் கிளர்ச்சிகளின் தோல்விக்கு அது பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் காட்ட முனைந்தது. தன் நண்பர் மேற்கொண்டிருந்த பொருளாதார ஆய்வுகளை முடிப்பதற்காக அவருக்கு அதிக நேரம் கிடைக்கச் செய்யும் பொருட்டு எங்கெல்ஸ், அமெரிக்காவில் வெளிவந்து கொண்டிருந்ததும் பரவலாகப் படிக்கப்பட்டுவந்ததுமான 'நியூயார்க் ட்ரிப்யூன்' ஏட்டில் மார்க்ஸின் பெயரால் வெளிவந்த அறுநூறு கட்டுரைகளில் ஏறத்தாழ பாதிக் கட்டுரை களை எழுதினார். ஐரோப்பாவில் நடந்துவந்த பல போர்களின் போக்குகள் பற்றியும், அவை ஏற்படுத்தும் சாத்தியமான விளைவுகள்

14. 1867 ஆகஸ்ட் 16 அதிகாலை 2 மணிக்கு மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதம்: *MECW*, Vol.42, pp.401-402.

15. F. Engels. The Peasant War in Germany, *MECW*, Vol. 10, 1978.

பற்றியும் அமெரிக்க மக்களுக்குத் தன் கட்டுரைகள் மூலம் தெரியப் படுத்தி வந்தார். அந்தப் போர்களின் வளர்ச்சிகளை முன்கூட்டியே பார்த்தும், பல்வேறு முனைகளில் பயன்படுத்தப்படும் இராணுவ மூலோபாயங்கள் யாவை என்பதை எதிர்பார்த்தும் அவர் கூறியவை பெரும்பாலும் சரியானவை என்பதை நிரூபித்தார். இதன் காரணமாக, அவரது தோழர்களால் "தளபதி" என்ற செல்லப் பெயரால் அழைக்கப் பட்டார்.

அவரது இதழியல் செயல்பாடு நீண்டகாலம் இருந்து வந்தது. 1870-71ஆம் ஆண்டுகளில் அவர் 'பிரெஞ்சு-பிரஷ்யப் போர் பற்றிய குறிப்புகள்'[16] என்ற நூலை வெளியிட்டார். அது, 'பால் மால் கெஜட்'[17] என்ற ஆங்கில நாளேட்டிற்கு அவர் எழுதி வந்த 60 தொடர் கட்டுரைகளின் தொகுப்பாகும். அவற்றில் அவர் பாரிஸ் கம்யூன் நிறுவப்படுவதற்கு முன் நடந்த இராணுவ நிகழ்வுகளைப் பற்றிய பகுப்பாய்வு செய்திருந்தார். அவை மிகுந்த பாராட்டுகளைப் பெற்றிருந்ததுடன், இராணுவ நிகழ்வுகள் போன்றவற்றைத் துல்லியமாகவும் விரைவாகவும் மதிப்பிடுவதில் அவருக்கிருந்த திறமைக்கு சாட்சியமாக விளங்கின.

III. முக்கியமான கோட்பாட்டுப் பங்களிப்புகள்

அடுத்த பதினைந்து ஆண்டுகளில், அவ்வப்போது தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகளில் அவர் தனது முக்கியமான கோட்பாட்டுப் பங்களிப்புகளை வழங்கினார். தொழிலாளர் இயக்கத்தில் இருந்த அவரது அரசியல் எதிராளிகளின் நிலைப்பாட்டை எதிர்த்து எழுதப்பட்ட அக்கட்டுரைகள், சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் தெளிவை ஏற்படுத்த முனைந்தவையாகும். 1872, 1873ஆம் ஆண்டுகளில் 'வோல்க்ஸ்டாட்'[18] என்னும் ஏட்டிற்கு மூன்று தொடர் கட்டுரைகள் எழுதினார். அவை 'குடியிருப்புப் பிரச்சினை' என்ற தலைப்பில் சிறு நூலாகவும் வெளிவந்தது.[19] அக்கட்டுரைகள், ஜெர்மனியில்

16. F.Engels, Notes on Franco-Prussian War, *MECW*, Vol 22.

17. *The Pall Mall Gazette;* இலண்டனில் 1865ஆம் ஆண்டு முதல் 1921 வரை வெளிவந்து கொண்டிருந்த நாளேடு.

18. *Volkstatt :* ஜெர்மன் சோசலிச ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அதிகார பூர்வமான ஏடு; வில்லெஹ்ம் லீப்னெஹ்ட்டை ஆசிரியராகக் கொண்டும், மார்க்ஸ், எங்கெல்ஸின் ஒத்துழைப்புப் பெற்றும் ஜெர்மன் நகரமான லீப்ஸெக்கிலிருந்து 1869 முதல் 1876 வரை வெளிவந்து கொண்டிருந்தது.

19. F.Engels, The Housing Question, *MECW*, Vol.23, 1986.

பரவிவந்த பியர் ஜோசப் புருதோனின்[20] கருத்துகளை எதிர்ப்பதையும், சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் கொள்கை பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கான மாற்றீடு அல்ல என்பதைத் தெளிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவையாகும். 1878இல் அவர் எழுதிய 'டூரிங்குக்கு மறுப்பு' என்ற நூல் வெளிவந்தது.[21] "இயக்கவியல் முறை, கம்யூனிஸ உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றைப் பற்றிய ஏறத்தாழ ஒன்றிணைந்த விளக்கம்" என்று அவரால் வர்ணிக்கப்பட்ட அந்த நூல், மார்க்ஸியக் கோட்பாட்டின் உருவாக்கத்தில் முக்கியமான ஆதார நூலாகியது.[22] அவரது காலத்தில் குறுக்கு வழியில் தங்கள் கருத்துகளை

20. புரூதோன் (Pierre-Joseph Proudhon:1809-1865) : பொருளாதார, சமூகவியல் தொடர்பான கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிய பிரெஞ்சுச் சிந்தனையாளர். பெரு முதலாளியச் சொத்துடைமையைக் குட்டி பூர்ஷ்வாக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்த அவர், தனியாரின் சிறு சொத்துடைமைகள் என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறினார். தொழிலாளர்கள், சொந்த உற்பத்திச் சாதனங்களை வாங்கிச் சேகரித்துக் கைவினைஞர்கள் ஆவதற்கு இலவசக் கடன் வழங்கும் 'மக்கள் வங்கிகள்' உருவாக்கப்பட வேண்டும் என்றும், இந்தக் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கவும் விற்கவும் 'பரிவர்த்தனை வங்கிகள்' உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிற ஒரு கற்பனைத் திட்டத்தை வகுத்தார். அவரது திட்டத்தின்படி, இந்த வங்கிகள் மூலம் உழைப்பாளிகள் (கைவினைஞர்கள்) தங்கள் உற்பத்திப் பொருள்களை 'நியாய விலைக்கு' விற்கவும் வாங்கவும் செய்வார்கள்; அதேவேளை முதலாளித்துவ உடைமையில் உள்ள உற்பத்திக் கருவிகளும் சாதனங்களும் அப்படியே விட்டு வைக்கப்பட்டிருக்கும்! பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு என்னும் அமைப்பே இருக்கக் கூடாது என்று கூறிய அவர், தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்துத் தங்கள் கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடுவதை எதிர்த்தார். புரூதோன் எழுதிய "பொருளாதார முரண்பாடுகளின் அமைப்பு முறை அல்லது வறுமையின் தத்துவம்" *(The System of Economic Contradictions, or The Philosophy of Poverty)* என்ற நூலை விமர்சித்து "தத்துவத்தின் வறுமை" *(The Poverty of Philosophy-Answer to* The Poverty of Philosophy *by M.Proudhon)* என்னும் நூலை மார்க்ஸ் எழுதினார்.

21. Frederick Engels, Anti-Duhring- Herr Eugen Duhring's Revolution in Science, *MECW*, Vol.25, 1987.

22. எங்கெல்ஸின் 'டூரிங்குக்கு எதிர்ப்பு' (Anti-Duhring-Herr Eugen Duhring's Revolution in Science') என்னும் நூல் மார்க்ஸ் உயிரோடு இருந்த காலத்திலேயே, அவருக்கு முழுமையாகத் தெரிந்தே வெளியிடப்பட்டது. இது குறித்து எங்கெல்ஸ் இந்த நூலின் மூன்று பதிப்புகளுக்குமான முன்னுரையில் கூறுகிறார்: "இந்த நூலில் விவரமாக விளக்கப்பட்டுள்ள கண்ணோட்ட முறை பெருமளவுக்கு மார்க்ஸால் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது என்பதையும், மிக சிறு அளவிலேயே அது என்னால் வளர்க்கப்பட்டது என்பதையும், அவருக்குத் தெரியாமல் இந்த விளக்கத்தை வெளியிடக்கூடாது என்ற சுய புரிதல் எங்களுக்கிடையே இருந்தது என்பதையும் நான் போகிற போக்கில் குறிப்பிட்டாக வேண்டும். இதன் கையெழுத்துப்படி முழுவதையும் அது அச்சிடப்படுவதற்கு முன் அவருக்குப் படித்துக் காட்டினேன். பொருளாதாரம் பற்றிய பத்தாவது அத்தியாயத்தில் ஒரு→

நிறுவ முயன்றவர்களுக்கு எதிராகப் பகிரங்கமான கருத்துப் போராட்டம் நடத்தும் பொருட்டு மார்க்ஸியத்தைப் பிரபல்யப்படுத்த எங்கெல்ஸ் எழுதியவற்றை ஜெர்மன் சோசலிச ஜனநாயக இயக்கத்தில்[23] இருந்த

← பகுதி *(Kritische Geschichte)* மார்க்ஸால் எழுதப்பட்டது. ஆனால், அவப்பேறாக என்னால் அது, முற்றிலும் புறக்காரணங்களால், சற்றே சுருக்கப்பட வேண்டியிருந்தது. உண்மையில் நாங்கள் தனிச்சிறப்பான அறிவுத் துறைகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதை எப்போதுமே வழக்கமாகக் கொண்டிருந்தோம்" (Frederick Engels, Prefaces to the Three Editions to Anti-Duhring-Herr Eugen Duhring's Revolution in Science,p.9 in *MECW,* Vol.25, 1987)

23. சோசலிச ஜனநாயக இயக்கம் (Social Democratic Movement) : முதலாம் அகிலத்தை (சர்வதேசத் தொழிலாளர் சங்கம் - First International) மார்க்ஸும் எங்கெல்ஸும் தொடங்கிவைத்த நாள் முதல் 'சோசலிச-ஜனநாயகம்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வந்தது. இச் சொற்கள் தமிழக மார்க்ஸிய வட்டாரங்களில் 'சமூக-ஜனநாயகம்' என்றே தவறாகத் தமிழாக்கம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'ஜனநாயகம்' என்பது ஒரு பூர்ஷ்வாக் கருத்து. அரசியல் ஜனநாயகத்தை மட்டும் உத்திரவாதம் செய்கிற பூர்ஷ்வா ஜனநாயகத்திற்கு மாறாக அரசியல் ஜனநாயகத்தைப் பொருளாதார ஜனநாயகமாகவும் விரிவுபடுத்த வேண்டும் என்ற சோசலிசவாதிகளின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக 'Social Democracy' என்பது பயன்படுத்தப்பட்டு வந்தது. அதாவது, அன்று 'சோசலிச ஜனநாயகம்' என்பதன் பொருள் ஜனநாயக சோசலிசம் என்பதாகும். முதலாம், இரண்டாம் அகிலத்தில் உறுப்பியம் வகித்த எல்லா அமைப்புகளுமே - அவை சீர்திருத்தவாத அமைப்புகளானாலும் சரி, புரட்சிகர அமைப்புகளானாலும் சரி - 'Social Democratic Parties' என்றே அழைக்கப்பட்டு வந்தன. லெனினின் தலைமையிலிருந்த கட்சியின் பெயர்கூட 'ரஷ்ய சோசலிச ஜனநாயகத் தொழிலாளர் கட்சி' என்பதுதான். முதல் உலகப் போர் வெடித்ததும் 'தாய்நாட்டைக் காப்பாற்றுதல்' என்னும் பெயரால் இரண்டாம் அகிலத்திலிருந்த பெரும்பாலான சோசலிச-ஜனநாயகக் கட்சிகள் போரை ஆதரித்தன. ஏகாதிபத்தியப் போரில் பாட்டாளிவர்க்கம் பங்கேற்கக்கூடாது என்னும் நிலைப்பாட்டை எடுத்தவர்கள் லெனின், ரோஸா லுக்ஸம்பெர்க் போன்ற சிறுபான்மையினர்தான். அவர்கள் ஜிம்மெர்வால்ட் என்னும் இடத்தில் கூடி இரண்டாம் அகிலத்திலிருந்த சந்தர்ப்பவாதப் போக்கை எதிர்த்துப் போராடினர். 1917இல் நடந்த உலகின் முதல் சோசலிசப் புரட்சிக்குப் பிறகு, இரண்டாம் அகிலத்திலிருந்த சந்தர்ப்பவாதப் போக்கிலிருந்து உண்மையான புரட்சிகரச் சக்திகளை முற்றிலுமாக வேறுபடுத்திக் காட்ட, 1919 இல் லெனினால் மூன்றாம் அகிலம் நிறுவப்பட்டது. இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாத 'சோசலிச-ஜனநாயகவாதிகளி'டமிருந்து தங்களை வேறுபடுத்திக்கொண்டவர்கள், 'கம்யூனிஸ்டுகள்' என அழைத்துக்கொள்ளத் தொடங்கினர். 'ரஷ்ய சோசலிச-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி'யும் 'ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி'யாகியது. ஜெர்மன் சோசலிச ஜனநாயகக் கட்சியும் வலதுசாரிப் பிரிவாகவும் இடதுசாரிப் பிரிவாகவும் பிளவுபட்டது. ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் பின்னர் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவினர். சோசலிச-ஜனநாயகவாதிகளைப் பொருத்தவரை முதலாளியத்தின் கீழ் ஏற்பட்டுவரும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தவிர்க்கவியலாதபடி சோசலிசத்திற்கு இட்டுச் செல்லும், முதலாளிய அரசைப் பயன்படுத்துவதன் மூலம் சோசலிசத்தை உருவாக்க முடியும் என்பதாகும். நாளடைவில் சோசலிச-ஜனநாயக இயக்கம்,→

பிந்திய தலைமுறையைச் சேர்ந்தவர்களின் கொச்சை மார்க்ஸியத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இயக்கவியலை விளக்க அவர் இயற்கை விஞ்ஞானங்களை நாடியது சமூக நிகழ்வுப் போக்குகளைப் பற்றிய பரிணாமவியல் விளக்கத்திற்கான கதவுகளைத் திறந்துவிட்டது. இதனால் சமுதாய வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் பற்றிய மார்க்ஸின் மேலும் நுட்பமான பகுப்பாய்வுகள் போதிய முக்கியத்துவம் பெறாமல் போயின. மார்க்ஸியக் கல்வி புகட்டுவதற்காக 'டூரிங்குக்கு மறுப்பு' நூலிலுள்ள மூன்று அத்தியாயங்கள் திருத்தி எழுதப்பட்டு, 'கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்' என்ற நூலாக வெளியிடப்பட்டது. அது மூல நூலில் இருந்த அத்தியாயங்களை விடக் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதிலுள்ள சிறப்புகள் ஒருபுறமிருந்தாலும், 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யைப் போல அதுவும் பரவலாகச் சென்றடைந்தது என்றாலும், "விஞ்ஞானம்", "விஞ்ஞான சோசலிசம்" என்ற எங்கெல்ஸின் கருத்தாக்கங்கள், பிற்காலத்தில் மார்க்சிய லெனினியத்தை விவிலியமாகக் கொண்டவர்கள் கைக்கொண்டதும், "கம்யூனிசத்தைத் தோற்றுவித்தவர்"களின் கருத்துகளைப் பற்றிய எவ்வித விமர்சனரீதியான விவாதங்கள் நடைபெறுவதை அனுமதிக்காததுமான, அறிவுத் தோற்றவியல் எதேச்சதிகாரத்துக்கான (epistemological authoritarianism) எடுத்துக்காட்டுகளாக அமைந்து விட்டன. 1873 முதல் 1883வரை பல குறுக்கீடுகளுக்கு ஊடாக எங்கெல்ஸ் மேற்கொண்டு வந்த ஆராய்ச்சித் திட்டத்தின் சிதறல்களான 'இயற்கையின் இயக்கவியல்'[24] பெரும் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்ட

←பூர்ஷ்வா அரசாங்கத்தில் தொழிலாளர்களுக்குச் சாதகமான சில சீர்திருத்தங்களைச் செய்வது, சலுகைகளைப் பெற்றுத் தருவது என்னும் நிலைக்குச் சுருங்கிவிட்டது. ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளில் இத்தகைய சோசலிச-ஜனநாயகக் கட்சிகள் உள்ளன. பிரிட்டிஷ் தொழிற் கட்சி, பிரெஞ்சு சோசலிசக் கட்சி, ஜெர்மன் சோசலிச-ஜனநாயகக் கட்சி ஆகியன இத்தகையவைதான். 'உலகமயமாக்கல்' தொடங்கிய பிறகு தொழிலாளர்களுக்குச் சாதகமான சீர்திருத்தத் திட்டங்களைக் கூட இக் கட்சிகள் கைவிட்டுவிட்டு நவ-தாராளவாத சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்றன. முதலாளியத்துடன் சமரசம் செய்துகொள்ளும் 'சோசலிச வாதிகள்', 'கம்யூனிஸ்டுகள்' ஆகியோரையும்கூட சோசலிச-ஜனநாயகவாதிகள் என அழைப்பது வழக்கமாகிவிட்டது. ஆக, 1919க்குப் பிறகு, 'சோசலிச - ஜனநாயகம்' என்னும் சொல், சந்தர்ப்பவாத சோசலிசவாதிகளைக் குறிக்கும் இழிவுக்குறிப்புச் சொல்லாகவே கம்யூனிஸ்ட் இயக்கத்தினரால் பயன்படுத்தப் பட்டு வருகிறது. எனவே, 'சோசலிச-ஜனநாயகம்' என்னும் சொல் வரலாற்றின் எந்தக் காலகட்டத்தில், எந்தச் சூழலில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கொண்டே அதனுடைய அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். 'சோசலிச ஜனநாயகம்' தொடர்பான கூடுதலான விவரங்களுக்கு : *https://www.britannica.com/topic/social-democracy* (Accessed on 29.11.2020)

24. Frederick Engels, Dialectics of Nature, *MECW*, Vol.25, 1987.

பொருளாக இருந்துள்ளது. அது மார்க்ஸியத்தின் ஆதார அம்சம் என்று சிலரும், சோவியத் வறட்டுச்சூத்திரத்தை உருவாக்கிய முதன்மைக் குற்றவாளி என்று வேறு சிலரும் கருதுகின்றனர். முழுமை பெறாத அந்தப் படைப்பு இன்று எங்கெல்ஸின் சிந்தனையின் வரம்புகளைக் காட்டும் நூலாக மட்டுமல்லாது, சூழலியல் தொடர்பான அவரது விமர்சனப் பகுப்பாய்வில் உள்ளடங்கியுள்ள ஆக்கபூர்வமான கருத்துகளைக் கொண்ட படைப்பாகவும் வாசிக்கப்பட வேண்டும்.[25]

25. உலகப் புகழ்பெற்ற மார்க்ஸிய ஏடான 'மன்த்லி ரெவ்யூ' ஏட்டின் ஆசிரியரும், சூழலியலுக்கு மார்க்ஸும் எங்கெல்ஸும் வழங்கியுள்ள பங்களிப்புகளைப் பற்றிய ஆழமான ஆராய்ச்சிகளைக் கொண்ட பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளவருமான ஜான் பெல்லாமி ஃபோஸ்டர், எங்கெல்ஸின் 'இயற்கையின் இயக்கவியல்' மட்டுமின்றி 'இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை' என்ற நூலும்கூட இன்றைய அறிவியல் உலகில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: மார்க்ஸுடன் இணைந்த ஒரு முக்கியமான மார்க்ஸியக் கோட்பாளர் என்ற வகையில் எங்கெல்ஸின் புகழை மீட்டமைப்பதில் ஏற்பட்ட உண்மையான கருத்துமாற்றம், வரலாற்றாசிரியர்களிடமிருந்தோ, அரசியல் பொருளாதாரவாதிகளிடமிருந்தோ வரவில்லை; மாறாக, இயற்கை விஞ்ஞானிகளிடமிருந்தே வந்தது. 1975இல் ஸ்டீஃபன் ஜே கோல்ட் (Stephen J Gould) 'நேச்சுரல் ஹிஸ்டரி' என்னும் ஏட்டில் மனிதரின் பரிணாம வளர்ச்சி பற்றிய எங்கெல்ஸின் கோட்பாட்டை - உழைப்பின் பாத்திரத்தை வலியுறுத்திய கோட்பாட்டை - வெளிப்படையாகவே கொண்டாடினார். விக்டோரிய காலத்தில், மனித பரிணாம வளர்ச்சி பற்றிய மிக வளர்ச்சியடைந்த கருத்தமைப்பே அது என்று கூறினார். இருபதாம் நூற்றாண்டில் ஆஸ்ட்ரலோபிதிகஸ் ஆஃப்ரிகானஸ் (Australopithecus africanus) என்ற உயிரினத்தை மானுடவியல் கண்டுபிடித்ததை எங்கெல்ஸின் கருத்தமைப்பு முன்கூட்டியே எதிர்பார்த்தது என்றும் எழுதினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு தன் கருத்தை விரிவுபடுத்தி 'நியூயார்க் ரெவ்யூ ஆஃப் புக்ஸ்' ஏட்டில் எழுதிய கட்டுரையில் கோல்ட், மரபணுவியல் வகைப்பட்ட பரிணாம வளர்ச்சி பற்றி பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே எங்கெல்ஸ் எழுதியிருந்ததை வெகுவாகப் பாராட்டினார். 1985இல் படிநிலை வளர்ச்சி உயிரியல் துறையில் (Evolutionary Biology) புகழ்பெற்ற ரிச்சர்ட் லெவோன்டின் (Richard Lewontin) ரிச்சர்ட் லெவின்ஸ் (Richard Levins) ஆகிய விஞ்ஞானிகள் எழுதியுள்ள 'இயக்கவியல் உயிரியலாளர்' (The Dialectical Biologist) என்னும் புகழ்பெற்ற நூலை எங்கெல்ஸுக்கு பின்வரும் வாசகங்களுடன் அர்ப்பணித்துள்ளனர்: "பல சமயங்களில் விஷயங்களை சரிவரப் புரிந்துகொள்ளாமல் இருந்தாலும், எங்கு சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமோ அங்கு மிகச் சரியாகப் புரிந்துகொண்ட எங்கெல்ஸுக்கு". நோய்களைக் கண்டறிவதிலும், அவை பரவுவதலையும், அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் வல்லுநராக இருந்த ஹொவார்ட் வெய்ட்ஸ்கின் (Howard Waitzkin) எழுதிய 'இரண்டாம் நோய்' (The Second Sickness) என்னும் நூல், 'இங்கிலாந்தில் தொழிலாளர் நிலைமைகள்' என்னும் நூலில் எங்கெல்ஸ் கண்டறிந்த சில விஷயங்கள் தன்னைப் போன்ற வல்லுநர்களுக்கு அவர் முன்னோடியாக இருந்தார் என்பதைக் காட்டுகிறது என்று எழுதினார். காண்க: John Bellamy Foster, The Return of Engels, Jacobin, 28.11.2016, *https://www.jacobinmag.com/2016/11/engels-marx-ecology-climate-crisis-materialism* (Accessed on 30.11.2020)→

இயக்கவியலை அவர் பயன்படுத்திய விதம், நிச்சயமாக மார்க்ஸின் சிந்தனையிலுள்ள கோட்பாட்டுரீதியான மற்றும் ஆராய்ச்சி முறை வகைப்பட்ட சிக்கலான தன்மையை எளிமைப்படுத்தக்கூடியதாக உள்ளது என்றாலும், கடந்த காலத்தில் சிலர் அற்பத்தனமாகவும் மேலோட்டமாகவும் செய்ததைப் போல, மார்க்ஸின் எழுத்துகளில் அவர்களுக்குப் பிடிக்காதவற்றுக்கு எங்கெல்ஸின் 'இயற்கையின் இயக்கவிய'லைப் பொறுப்பாக்குவதும், கோட்பாட்டுரீதியான தவறுகளுக்கும் நடைமுறைரீதியான தோல்விகளுக்கும் எங்கெல்ஸ் மீது மட்டும் பழி சுமத்துவதும் தவறானவை.

1884இல் எங்கெல்ஸ், 'குடும்பம், தனிச்சொத்து, அரசு'[26] என்ற நூலை வெளியிட்டார். அது லூயி மார்கன் என்ற அமெரிக்கர் மேற் கொண்ட மானுடவியல் ஆய்வுகளைப் பற்றிய பகுப்பாய்வு. வரலாற்று ரீதியாக தாய்வழி உறவுகள், தந்தைவழி உறவுகளுக்கு முந்தியவை என்பதை மார்கன் கண்டறிந்தார். மனிதகுலத்தின் வரலாற்றைப் பொருத்தவரை, மார்கனின் கண்டுபிடிப்பு, உயிரியலுக்கு டார்வினின்

←எங்கெல்ஸைப் போல் 'இயற்கையின் இயக்கவியல்' பற்றி மார்க்ஸ் ஒருபோதும் பேசவில்லை என்றும், அவர் 'சமுதாயத்தில் உள்ள இயக்கவியல்' பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருந்தார் என்றும் வாதிட்டு இருவரையும் எதிரெதிர் துருவங்களில் வைக்கும் முயற்சி மேலை நாட்டு மார்க்ஸிய அறிஞர்கள் சிலரால் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களின் கூற்றுகளை மறுதலிக்கும் கருத்துகள், இதுவரை பதிப்பிக்கப்படாத மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுத்துகளில் மட்டுமின்றி, ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ள அவர்களின் படைப்புகளிலும் காணப்படுவதை இன்று ஏராளமான மார்க்ஸிய அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்: 'மூலதனம்' நூலின் முதல் பாகத்தின் 11ஆம் அத்தியாயத்தில் 'உபரி மதிப்பின் வீதமும் திரளும்' (The Rate and Mass of the Surplus Value) என்னும் பகுதியில் மத்தியகாலத்தில் பொருட்களை உற்பத்தி செய்து வந்த கைவினைச்சங்கங்கள் (Guilds), எவ்வாறு ஒரு குறிப்பிட்ட உற்பத்தித் தொழிலில் ஆண்டானாக (Master) இருந்தவனை முதலாளியாக (Capitalist) ஆக விடாமல் தடுத்தன என்பதை விளக்கும் மார்க்ஸ், முதலாளிய உற்பத்தி முறையின் கீழ் "உற்பத்திக்காக முன்பணமாக முதலீடு செய்யப்படும் குறைந்தபட்சத் தொகை, மத்தியகாலத்தின் அதிகபட்சத் தொகையைத் தாண்டி மிகவும் அதிகரித்துவிடும்போதுதான் பணத்தின் அல்லது சரக்குகளின் உடைமையாளர் உண்மையாகவே முதலாளியாக மாற்றப்படுகிறார்" என்றும், "இயற்கை அறிவியலில் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு அப்பால், வெறும் அளவு வேறுபாடுகளாக இருப்பவை, இயக்கவியல் மாற்றத்தின் காரணமாக, பண்பு வேறுபாடுகளாக மாறுகின்றன என்று ஹெகல் தனது 'தர்க்கவியல்' நூலில் கண்டறிந்த விதி, இங்கும் சரியானதென்று காட்டப்படுகின்றது" என்றும் கூறுகிறார். (Karl Marx, *Capital*, Volume I, Penguin in association with New Left Review, 1990, p.423.)

26. Frederick Engels, Origins of the Family, Private Property and the State. In the Light of the Researches by Lewis H. Morgan *MECW*, Vol.26, 1990.

கோட்பாடு எவ்வளவு முக்கியமோ, அரசியல் பொருளாதாரத்துக்கு உபரி-மதிப்பு பற்றிய மார்க்ஸின் கண்டுபிடிப்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது என்று எங்கெல்ஸ் கருதினார். பிற்காலத்தில் சமுதாயத்திலும் அரசிலும் வளர்ச்சியடைந்த முரண்பாடுகளுக்கான கரு குடும்பத்திலேயே இருந்தது என்று அவர் கூறினார். மானுட வரலாற்றில் தோன்றிய வர்க்க ஒடுக்குமுறை, பெண்பாலார் மீது ஆண்பாலார் செலுத்திய ஒடுக்குமுறையுடன் கூடவே நிகழ்ந்தது என்று கூறினார். பாலின சமத்துவம், காலனிய எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றைப் பொருத்தவரை விடுதலை என்ற இலட்சியத்தை உயர்த்திப்பிடிக்க அவர் தயங்கியதில்லை என்பதோடு, அதை உறுதியுடன் விளக்கவும் செய்தார்.

இறுதியாக, 1886இல் ஜெர்மன் கல்விப்புல வட்டங்களில் கருத்து முதல்வாதம் புத்தெழுச்சி பெற்று வந்ததை எதிர்க்கும் குறிக்கோளுடன் 'லுட்விக் ஃபயர்பாஹ¤ம் செவ்வியல் ஜெர்மன் தத்துவ இயலின் முடிவும்'[27] என்ற நூலை வெளியிட்டார்.

IV. மார்க்ஸியத்தைப் பரப்புதல்

மார்க்ஸின் மறைவுக்குப் பிறகு எங்கெல்ஸ் வாழ்ந்த பன்னிரண்டு ஆண்டுக் காலத்தை அவர், தன் நண்பர் விட்டுச் சென்ற படைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும், சர்வதேச தொழிலாளர் இயக்கத்திற்குத் தலைமை தாங்குவதற்கும் அர்ப்பணித்தார். 'புதிய நாளேடு' *(Die Neue Zeit)*, 'சோசலிஸ்ட்' *(Le Socialiste)*, 'சோசலிச விமர்சனம்' *(Critica Sociale)* ஆகிய ஏடுகள் உட்பட, அவர் காலத்திய முக்கிய சோசலிச ஏடுகளுக்கான கட்டுரைகளையும் கட்சிப் பேராயங்களுக்கான வாழ்த்துச் செய்திகளையும் எழுதினார். அதேபோல இந்தக் காலகட்டத்தில் பல்வேறு கோட்பாட்டு மற்றும் அமைப்புப் பிரச்சினைகள் தொடர்பாக அவர் எழுதிய நூற்றுக் கணக்கான கடிதங்கள் ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் தொழிலாளர் கட்சிகள் வளர்ச்சியடைவதற்கு அவர் வழங்கிய பங்களிப்புகளை மேலும் ஆழமாகப் புரிந்துகொள்வதைச் சாத்தியப் படுத்துகின்றன. இந்தக் கடிதங்களிற் சில, இரண்டாம் அகிலத்தின் பிறப்பு, அதில் நடைபெற்று வந்த விவாதங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவை. அந்த அகிலத்தை நிறுவுவதற்கான பேராயம் 1889ஆம் ஆண்டும் ஜ¨லை 14இல் நடைபெற்றது.[28]

27. *MECW*, Vol.26, 1990.

28. 1889 ஜ¨லை 14-19ஆம் நாள்களில் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச சோசலிஸ்ட் தொழிலாளர் பேராயம்தான் (International Socialist Workers' Congress) 'இரண்டாவது சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை' (II International - 'இரண்டாம் அகிலம்')→

இவை அனைத்தையும்விட முக்கியமானது என்னவென்றால், அவர் தன் மிகச் சிறந்த ஆற்றல்களை மார்க்ஸியத்தைப் பரப்புவதற்கு அர்ப்பணித்தார். எல்லாவற்றுக்கும் முதலாக, மார்க்ஸால் முடிக்க முடியாமல் போன, 'மூலதனம்' நூலின் இரண்டாம், மூன்றாம் பாகங்களின் வரைவுகளைப் பதிப்பித்து வெளியிடுகின்ற மிகக் கடினமான கடமையை மேற்கொண்டார். ஏற்கெனவே வெளியிடப் பட்டவற்றின் புதிய பதிப்புகள் மீதும், ஏராளமான மொழியாக்கங்கள் மீதும் மேற்பார்வை செலுத்தினார். மார்க்ஸாலும் தன்னாலும் எழுதப்பட்ட படைப்புகளின் மீளச்சாக்கங்களுக்கு முகவுரைகளும் பின்னுரைகளும் எழுதினார். அவற்றிலொன்று, மார்க்ஸின் 'பிரான்ஸில் வர்க்கப் போராட்டங்கள்'(1850) என்ற நூலுக்கு அவர் எழுதிய புதிய அறிமுகவுரையாகும்.[29] இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் அவர்

←தோற்றுவித்தது. 'சாத்தியவாதிகள்' (Possibilists) என்று அழைக்கப்பட்ட பிரெஞ்சு சந்தர்ப்பவாதிகளும், பிரிட்டிஷ் சோசலிச ஜனநாயகக் கூட்டமைப்பில் இருந்த அவர்களது ஆதரவாளர்களும் இணைந்து அந்தப் பேராயத்துக்கான ஆயத்தங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளவும், பேராயத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், மார்க்ஸியத் தத்துவத்தின் அடிப்படையில் சோசலிச, தொழிலாளர் அமைப்புகளின் சர்வதேச ஒற்றுமை ஏற்படுவதற்கு ஊறு விளைவிக்கவும் முயன்றனர். ஆனால், எங்கெல்ஸின் நேரடித் தலைமையின் கீழ் இடைவிடாது நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக அவர்கள் தோல்வியடைந்தனர். பாஸ்டில் சிறை தகர்க்கப்பட்ட நூறாவது ஆண்டு நிறைவு நாளான 1889 ஜூலை 14 அன்று பேராயம் தொடங்கியபோது, அதில் பெரும் பான்மையான பிரதிநிதிகள் மார்க்ஸியவாதிகளாக இருந்ததால், 'சாத்தியவாதிக'ளும் அவர்களது ஆதரவாளர்களும் ஒரு போட்டிப் பேராயத்தை நடத்தினர். ஆனால், அந்தப் பேராயத்தில் கலந்துகொண்டவர்கள் மிகச் சிறு எண்ணிக்கையிலானவர்களே. அவர்களில் சில போலிப் பிரதிநிதிகளும் இருந்தனர். சர்வதேச சோசலிசத் தொழிலாளர் பேராயம் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளின் உரைகளையும் ஆலோசனைகளையும் உன்னிப்பாகக் கேட்டு, சர்வதேசத் தொழிலாளர் சட்டங்களுக்கான அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்துத் தந்தது; எட்டு மணி நேர வேலைநாளுக்கான சட்டங்களைக் கொண்டுவரப் போராடுவதற்கு ஒப்புதல் அளித்தது; தொழிலாளர்கள் தங்கள் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தது; பாட்டாளி வர்க்கம் தனக்கான அரசியல் அமைப்புகளைக் கட்ட வேண்டியதன் தேவையையும், அது தனது அரசியல் குறிக்கோள்களை அடைவதற்குப் போராட வேண்டியதன் தேவையையும் சுட்டிக்காட்டியது; அனைத்துக் குடிமக்களையும் ஆயுத பாணிகளாக்க வேண்டும், நிலையான இராணுவங்கள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும் என்னும் தீர்மானத்தை இயற்றியது; ஒவ்வோராண்டும் மே முதல் நாளை தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசத் திருவிழாவாகக் கொண்டாடும்படி அனைத்து நாட்டுத் தொழிலாளர்களுக்கும் அறைகூவல் விடுக்கும் தீர்மானமும் அந்தப் பேராயத்தில்தான் நிறைவேற்றப்பட்டது. (End Notes to Karl Marx and Frederick Engels, *The Manifesto of the Communist Party,* Foreign Languages Press, Peking, 1970)

29. Frederick Engels, Introduction to Karl Marx's "The Class Struggles in France "(1895), *MECW,* Vol.27, pp.506-524.

எழுதிய அந்த அறிமுகவுரையில், ஐரோப்பாவிலிருந்த புதிய அரசியல் நிலைமைக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டிய புரட்சி பற்றிய ஒரு கோட்பாட்டை அவர் விரித்துரைத்தார். அக் கோட்பாட்டின் படி, பாட்டாளிவர்க்கம் சமுதாயத்தில் பெரும்பான்மையாக ஆகி விட்டதாலும், அனைவருக்கும் வாக்குரிமை இருப்பதாலும், தேர்தல் வழிமுறைகள் மூலம் அவ்வர்க்கம் அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்ளும் சாத்தியப்பாடு எதிர்காலத்தில் உள்ளது: புரட்சியையும், சட்டபூர்வமான செயல்பாடுகளையும் ஒருசேர நியாயப்படுத்தக்கூடிய சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இதன் பொருள் எங்கெல்ஸின் அறிமுகவுரையை, சட்டவாத, சீர்திருத்தவாத[30] முறையில் திரித்து ஜெர்மன் சோசலிச ஜனநாயகவாதிகள் கூறியதைப் போல் "தெருக்களில் நடக்கும் சண்டைக்கு" இனி எந்தப் பங்கும் இல்லை என்பதல்ல; மாறாக, மக்கள் திரளினரின் செயலூக்கமுள்ள பங்கேற்பு இல்லாமல் புரட்சியை நினைத்துப் பார்க்க முடியாது என்பதும், மக்களின் செயலூக்கமுள்ள பங்கேற்பைப் பெறுவதற்கு "நீண்டகால பொறுமையான வேலை" தேவைப்படும் என்பதும்தான் இதன் பொருள். இன்று எங்கெல்ஸைப் படிப்பது, அதுவும் நம் கண் எதிரே இன்றைய முதலாளியம் சரிந்து விழுந்து கொண்டிருக்கையில் அவரைப் படிப்பது, அவர் கூறிய பாதையைப் பின்பற்றி மீண்டும் ஒரு தாக்குதலை நடத்தும் விருப்பத்தைத் தூண்டுகிறது.

30. சீர்திருத்தவாதம் (reformism): பொதுவாக, இந்தச் சொல்லுக்கு நேர்மறையான பொருள்தான் உண்டு. ஆனால், மார்க்ஸியச் சொல்லாடல்களில் இது, முதலாளிய அமைப்புக்குள்ளேயே சில சலுகைகளைப் பெற்றுக்கொள்வது, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது போன்ற வரம்புகளுக்குள்ளேயே நின்று கொண்டு, முதலாளிய சமுதாயத்தைப் புரட்சிகரமான முறையில் சோசலிச சமுதாயமாக மாற்ற விரும்பாத பொருளாதார, அரசியல் போக்கையே குறிக்கும்.